Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம் : வரலாறு

வாரம் - 01

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை N. பத்மலோஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையிலன் அரசியல் மாற்றங்கள்

இலங்கை இராச்சியம் 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியரின் வசமானது முதல், 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெறும் வரையிலும் முழு இலங்கையும் பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்போது பிரித்தானியரால் காலத்துக்கு காலம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் பல இந்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டன. இவ் யாப்புகள் தொடர்பாகவும் இதனால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் தொடர்பாகவும் இப்பாடத்தில் நீங்கள் கற்கப் போகின்றீர்கள். எனவே மாணவர்களே பக்கம் 57 முதல் 61 வரை நன்கு வாசித்து விடையளிக்கவும்.

❄ **சரியான விடையின் கீழ் கோடிடவும்.**

1. இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியின் போது உருவாக்கப்பட்ட யாப்புகளில் 1838 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாப்பு யாது?

   I. டொனமூர் II. கோல்புறூக் III. மனிங் II. சோல்பரி

2. கண்டி இராச்சியம் பிரித்தானியர் கைவசமானது முதல் இலங்கை சுதந்திரம் பெறும் வரையிலான கால இடைவெளி எத்தனை வருடங்களாகும்?

   I. 133 II. 148 III. 144 II. 146

3.
   - சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாக கழகம் அமைக்கப்பட்டமை.
   - நாடு ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட்டமை.

   மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட யாப்பு சீர்திருத்தம் எது?

   I. டொனமூர் II. கோல்புறூக் III. மனிங் II. சோல்பரி

4. 1833 ஆரம்பிக்கப்பட்ட சட்டவாக்க கழகத்தின் உறுப்பினர் தொகை

   I. 18 II. 15 III. 21 II. 12

5. உத்தியோக சார்பற்றவர்களை நியமிக்கும் அதிகாரம் யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

   I. குடியேற்ற நாட்டுச் செயலாளர். II. கணக்காளர் நாயகம்

   III. திறைசேரி நாயகம் II. ஆளுநர் நாயகம்

1). கோல்புறூக் கமரன் இலங்கைக்கு வர காரணம் யாது?

2). கோல்புறூக் யாப்பின் முக்கியமான அம்சங்களை தருக.

3). கோல்புறூக்கின் பரிந்துரைகளில் அரசியல் சார்ந்த இரு விடயங்களைக் குறிப்பிடுக.